பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான முன்னணி
நிறுவனம்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன்

விலை
ரூபா
5-00

மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 07 புதன்கிழமை (21 – 06 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 206

பொ.ஐ. முன்னணி அரசில் பெரும் நெருக்கடி; அஷ்ரப், ஸ்ரீமானியின் கட்சிகள் விலகக்கூடும்!

'லங்காமுடித', 'ஹபரண' நேற்று வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 21

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்களுடன் 'லங்கா முடித' கப்பலும்—

திருகோணமலையில் இருந்து மாவை ஏற்றிக்கொண்டு 'ஹபரண' கப்பலும்—

நேற்று நண்பகல் அளவில் பருத்தித்துறைத் துறைமுகப் பகுதிக்கு வந்து சேர்ந்தன

காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வெளியே 5 மைல் தூரத்தில் நேற்றுக் காலை தரித்து நின்ற இவ்விரு கப்பல்களையும் கடற்படையினர் சோதனை நடத்திய பின்னர் பருத்தித்துறைக்கு வர அனுமதித்தனர்.

இருகப்பல்களில் இருந்தும் ஒரே நேரத்தில் பொருள் இறக்கும் வேலை நேற்றே பருத்தித்துறை துறைமுகத்தில் ஆரம்பமாகின.

அதேவேளை—

கொழும்பு துறைமுகத்தில் தரித்துள்ள 'மாஹோ' கப்பலில் பொருள் ஏற்றும் வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த இரு கப்பல்களிலும் யாழ்ப்பாணத்துக்கான தபால் பொதிகள் ஏதும் எடுத்துவரப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

[உ-3-4-173]

கொழும்பில் தேங்கிக் கிடக்கும்

300 தபால் பொதிகள் 'மாஹோ'வில் வரும்?

யாழ்ப்பாணம், ஜூன் 21

கொழும்பில் நீண்டநாட்களாகத் தேங்கிக் கிடக்கும் 300 இற்கும் மேற்பட்ட — வடபகுதிக்கான — தபால் பொதிகளை "மாஹோ" கப்பலில் எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

"மாஹோ" கப்பல் மண்ணெண்ணெய் ஏற்றிக் கொண்டு வடபகுதி நோக்கி புறப்படும் வேளையில் அக்கப்பலில் தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்படுமென்று கொழும்பிலிருந்து யாழ். செயலகத்திற்கு நேற்று அறிவிக்கப்பட்டது. (உ-4)

அல்லைப்பிட்டி பகுதியில் தலையற்ற சடலம்

கொழும்பு, ஜூன் 21

அல்லைப்பிட்டியில் தலையற்ற சடலம் ஒன்று காணப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கையில் –

மேற்படி சடலம் அடையாளம் காண முடியாதவாறு அழுகிய நிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. [உ-3-14)

குடாரப்பு கடற்பகுதியில் திங்களன்று பீரங்கித் தாக்கு

வடமராட்சி, ஜூன் 21

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள குடாரப்பு கடற்பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

சுமார் அரை மணி நேரம் நீடித்த இத்தாக்குதலின் போது பீரங்கி, துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

வெற்றிலைக்கேணியில் தரித்து நின்ற படையினருக்கு உணவுப் பொருள்களை இறக்கிக்கொண்டிருந்த கப்பலுக்கு பாதுகாப்பு வழங்கிய ஸ்ரீலங்கா கடற்படையின் இருவிசைப்படகுகளில் இருந்தே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத்தாக்குதலில் யுவதி ஒருவர் காயமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

அதேவேளை நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா கடற்படையினரின் இவ்விசைப்படகுகள் வடமராட்சி கிழக்கு கடற்பிரதேசத்தில் கரையை அண்டிய பகுதிகளில் ரோந்து வந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி முகாமிலிருந்தும் நேற்று முன்தினம் பிற்பகல் 2 30 மணி தொடக்கம் சுமார் ஒரு மணி நேரம் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக ஷெல் வீச்சுகள் நடத்தப்பட்டன. (உ-117-173)

ஜெலிக்நைட், யூரியாவுடன் அலுமினியப் பானை

வெல்லம்பிட்டியில் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 21

ஜெலிக்நைட், யூரியா கொண்ட அலுமினியப்பானை ஒன்று வெல்லம்பிட்டியில் நேற்று பிற்பகல் கண்டுபிடிக்கப்பட்டது.

வெல்லம்பிட்டியில் உள்ள வீதி ஒன்றின் நீர் செல்லும் வடிகாலை சீரமைத்துக் கொண்டிருந்த தொழிலாளர் இந்தப் பானையைக் கண்டதாகவும்—

குண்டு வெடிக்கவைக்கும் இராணுவப் பிரிவினர் அந்த இடத்துக்கு விரைந்து அதைப் பரிசோதனை செய்ததாகவும் —

பாதுகாப்பு அமைச்சு நேற்றிரவு தெரிவித்தது. [உ-3]

தமிழ் எம். பிக்களின் ஆதரவிலேயே தங்கியிருக்கும் நிலை வரும்

கொழும்பு, ஜூன் 21

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்குள் பெரும் நெருக்கடி தோன்றியிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அஷ்ரப் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், ஸ்ரீமானி அத்துலத் முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியும் அரசாங்கத்தில் இருந்து விலகக்கூடும் என்றும் அவதானிகள் கருதுகின்றனர்.

இஸ்ரேலுடன் ராஜீகத் தொடர்புகளை ஏற்படுத்துவது என்று எடுக்கப்பட்டுள்ள உத்தேச முடிவினாலும்—

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதைப் பின் போடுவது என்ற முடிவினாலும்—

முறையே அமைச்சர் அஷ்ரப்பும், அமைச்சர் ஸ்ரீமானியும் அதிருப்தி அடைந்துள்ளதாகவும், அவர்கள் இருவரும் அரசுக்கு தத்தமது கட்சிகள் வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்ளக்கூடிய அளவுக்கு நெருக்கடி முற்றியிருப்பதாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

போரை நடத்துவதற்கு இஸ்ரேலின் உதவி அரசுக்கு பெருமளவில் தேவைப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தன்னுடன் ராஜீக உறவை ஏற்படுத்த வேண்டும் என்று இஸ்ரேல் சந்திரிகாவுக்கு நெருக்குதல் கொடுத்து வருகிறது.

இஸ்ரேலுடன் ராஜீகத் தொடர்பு வைப்பதை அஷ்ரப்பின் கட்சி எதிர்க்கிறது. அதனைத் தொடர்ந்து அவ்வாறு செய்யப்போவதில்லை என்று கூறி சந்திரிகா, அமைச்சர் அஷ்ரப்பைச் சமாளித்துள்ளார்.

எனினும் இஸ்ரேலுடன் ராஜீக உறவை ஏற்படுத்த சந்திரிகா முடிவு செய்து விட்டதாக "தஐலண்ட்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

இந்த முடிவு அரசாங்கத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்புக் குண்டு வெடிப்புகளின் பின்னணியில் பாதாள உலக கும்பல்?

பாதுகாப்பு வட்டாரங்களில் இப்படியும் சந்தேகம்

கொழும்பு, ஜூன் 21

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு அரசியலுடன் தொடர்புடைய பாதாள உலக போதைவஸ்துக் குழுவே காரணமாக இருக்கலாம் என பாதுகாப்புப் பிரிவினர் சந்தேகிப்பதாக "ராவய" சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

வன் செயல்களை உருவாக்கி அதன் மூலம் சுமுக நிலையை முடக்குவதன் மூலம் அரசுக்கு சங்கடமான ஒரு நிலையைத் தோற்றுவித்து தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதே இதன் பின்னணியில் உள்ளவர்களின் நோக்கமாக இருக்கலாம் என பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

தென்பகுதிக் கிளர்ச்சியின் போது பெற்ற அனுபவங்கள் இந்தச் சதிமுயற்சிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது எனவும் சந்தேகிக்கப் படுகின்றது.

அண்மையில் கொழும்பிலிருந்து அனுராதபுரம் நோக்கிச் சென்ற பஸ் வண்டியை புத்தளம் பகுதியில் வழி மறித்த ஓர் ஆயுதக் குழுவினர் அதில் இராணுவத்தினர், பொலீசார் இருக்கிறார்களா என விசாரித்துள்ளதுடன் பஸ் புறப்படும் போது வானை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டுள்

[4ஆம் பக்கம் பார்க்க]

கட்டுநாயக்கா பகுதியில் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு, ஜூன் 21

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையம் உட்பட நாடு முழுவதிலும் உள்ள கேந்திர நிலையங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பூரண பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்காவிமானநிலையத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அங்கு பிரயாணப் பொதிகளை சோதனை செய்வதற்கு விசேட கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. வெடிமருந்து போன்றவற்றை கண்டுபிடிக்க விசேட பயிற்சி அளிக்கப்பட்ட மோப்பம் பிடிக்கும் நாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

வாகன தரிப்பிடம் வேறு இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

விமான நிலையத்துக்கு வரும் வாகனங்களை சோதனையிட கூடுதல் பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். [உ-3]

மனைவிமாரைக் காப்பாற்ற கணவன்மார் கண்விழிப்பு!

கொழும்பு, ஜூன் 21

காலிப்பகுதியில் உள்ள தமிழர்கள் தங்கள் மனைவிமாரைக் காப்பாற்ற இரவில் கண் விழித்து காவல் இருக்கிறார்கள்!

அண்மையில் காலியில் இடம்பெற்ற இனக்கலவரங்களை அடுத்து வேவ்வலத் தோட்டத்தில் உள்ள தமிழ் குடும்பங்களுக்குப் பாதுகாப்பு வழங்கவென இரவுக் காவற் கடமைக்குச் செல்லும் பொலீஸாரில் சிலர் அங்குள்ள தமிழ் மக்களிடம் ஆடு, கோழி, சாராயம் போன்றவற்றைத் தருமாறு கேட்பது மட்டுமன்றி –

—தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் குற்றங்களையும் புரியவும் முயன்று வருகின்றனராம்.

பொலீசாரிடமிருந்து தங்கள் மனைவிமாரைப் பாதுகாப்பதற்காக அங்குள்ள தமிழ் ஆண்கள் இரவில் நித்திரை விழிக்கிறார்களாம்.

இவர்கள் இரவில் நித்திரை விழிப்பதால் அவர்களால் தோட்டங்களில் [illegible] இல்லை என "ராவய" [illegible] தெரிவித்துள்ளது (உ-10)

முச்சந்திமுரளி



ஆனா... அரசியல் யானைகளுக்குக் கொண்டாட்டம் பாருங்கோ...!

முஸ்லிம்களுக்கு ஆயுதங்கள் வழங்குவதற்கு ஆட்சேபம்

தமிழர் கூட்டணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

அரசாங்கம் கிழக்கில் முஸ்லிம் இளைஞர்களை திரட்டி, பயிற்சி, அளித்து. அவர்களுக்கு ஆயுதம் வழங்க இருப்பதை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு மு. சிவசிதம்பரம் ஆட்சேபித்துள்ளதுடன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இதுபற்றி முறையிடவும் உள்ளார் என்று அறியவருகின்றது.

முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதம் வழங்குவது எதிர்பார்த்த விளைவைத் தராமல் போவதுடன் அபாயமானதும் ஆகும் என்று திரு. சிவசிதம்பரம் கூறினார். (க)

இந்து அமைப்பு மீதான தடையை நீதிமன்று ரத்து!

இந்திய அரசுக்கு நெருக்கடி

இந்து மத அமைப்பான விஸ்வ ஹிந்து பரிஷத்தை (உலக இந்து சபை) தடை செய்து இந்திய மத்திய அரசு விடுத்த உத்தரவை புதுடில்லி நீதிமன்றம் ஒன்று தள்ளுபடி செய்திருக்கிறது.

நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு இந்திய அரசுக்கு சட்ட ரீதியில் ஏற்பட்டுள்ள மிகமோசமான பின்னடைவு என வர்ணிக்கப்படுகின்றது.

1992 ஆம் ஆண்டு டிசம்பரில் அயோத்தியில் உள்ள பாபர் மசூதி தகர்க்கப்பட்ட சம்பவத்தை அடுத்து விஸ்வ ஹிந்து பரிஷத் உட்பட பல இந்து மத அமைப்புகளை இந்திய அரசு தடை செய்தது தெரிந்ததே.

இந்த அமைப்பைத் தடை செய்வதற்கான போதிய காரணங்களை முன்வைப்பதற்கு இந்திய அரசு தவறிவிட்டது என நீதிமன்றம் தனது 128 பக்கத் தீர்ப்பில் தெரிவித்திருக்கிறது.

நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்றுள்ள இந்தியாவின் பிரதான எதிர்க் கட்சியான பாரதீய ஜனதா, இந்திய மத்திய அரசு எதேச்சாதிகாரமாக செயற்படுகின்றது என்பதை நீதிமன்றத் தீர்ப்பு நிரூபித்திருக்கிறது எனத் தெரிவித்துள்ளது. [உ-3)

காலியில் எரிக்கப்பட்ட கடைகளுக்கு நஷ்டஈடு!

கொழும்பு, ஜூன் 21

கடந்த 2 ஆம் திகதி காலியில் தமிழர்களின் 21 கடைகள் தீவைக்கப்பட்டு கொளுத்தப்பட்ட சம்பவத்தில் பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சால் நஷ்டஈடு வழங்கப்படவிருக்கிறது.

காலிக்கு விஜயம் செய்த புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் மேற்கண்ட தகவலை தெரிவித்ததாக "ரூபவாஹினி" அறிவித்தது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றும் —

பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்கள் மீண்டும் கடைகளை ஆரம்பிக்க ஒருலட்சத்து 50 ஆயிரம் ரூபா கடன் வழங்கப்படும் என்றும்—

அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

காப்புறுதி செய்யாத கடைகளின் உரிமையாளர்களுக்கு நஷ்ட மதிப்பீட்டுக்கு ஏற்ப நஷ்டஈடு வழங்குமாறும் அமைச்சர் தமது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

தீவைப்பால் ஒரு கோடி 50 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(உ-3)

அதிபர்களுக்கும் சம்பள உயர்வு!

அமைச்சர் பத்திரான அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

பாடசாலை அதிபர்களின் சம்பளமும் விரைவில் அதிகரிக்கப்படவிருப்பதாக கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்திருக்கிறார்.

மக்கள் வங்கியின் உதவியுடன் ஆசிரியர்களுக்கென சேமிப்பு, கடன் வசதிகளை வழங்கும் திட்டம் ஒன்றை கடந்த ஞாயிறன்று காலி நகரில் அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய ஆசிரிய சேவை ஒன்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

அரசு-புலிகள் மோதலால் யானைகளுக்குக் குழப்பம்!

கொழும்பு, ஜூன் 21

கிழக்கு மாகாணத்தில் கட்டுமுறிப்புக் குளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட சம்பவத்தை அடுத்து — அரசுப் படைகள் — புலிகள் மோதலால் — குழப்பமடைந்த யானைகள், அண்மையில் உள்ள சிங்களக் கிராமம் ஒன்றுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்துள்ளன.

ரன்சரத்கன்ன என்ற கிராமத்துக்குள் புகுந்த யானைகள் சுமார் 15 வீடுகளை அடித்து நொறுக்கித் துவம்சம் செய்தன. [உ-10]

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய் சந்தியில் அமைந்துள்ள வீடு மூன்று கடையுடன் சேர்ந்த 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். தொடர்பு: மு. இரத்தினசபாபதி M.G.M. றைக்கிளி வேஸ், இல. 179, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [8596]

நல்ல இன பன்றிகளும், பன்றிக் குட்டிகளும் விற்பனைக்குண்டு. அண்ணாபாம் இணுவில். [சி-1528]

லான்ஸர் மொடல் - சுப்பர் கப் 50 விற்பனைக்குண்டு. (கோல்ட் கலர்) தொடர்பு: K. சுபாஸ், தபாற்கந்தோர் வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் [37153]

விசேஷ அன்ரனா

ரூபவாஹினி மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T.V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல் T.V. செட், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டில்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-1489]

விற்பனையாளர் தேவை

ரோஸ் பிராண்ட் இனிப்புத் தொழிற்சாலையின் உற்பத்திப் பொருள்கள் சந்தைப்படுத்துவதற்காக, தகுதி வாய்ந்த விற்பனையாளரிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: துரித சந்தைப்படுத்தல் சேவை, 66, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி-1526)

தேவை

பாவனைக்கு உட்படுத்தக் கூடிய குளிர்சாதனப் பெட்டிகள் [ப்.'.பிறிட்ஜ்] தேவையாகவுள்ளது. விற்பனை செய்ய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்: வானவில் குளிர்பான நிலையம், ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். [சி-1525]

முன்னரும் கடன் வழங்கவில்லையாம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வலிகாமம் மேற்குப் பிரதேச பம்பாய் வெங்காயச் செய்கையாளருக்கு, இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி. மேற்கு பிரிவினூடாக மக்கள் வங்கிக்கடன் இதுவரை வழங்கப்பட்டதில்லை என்றும் —

அதனால் அதனைத் தொடர முடியாத நிலை உண்டாக இடமில்லை என்றும்—

மேற்படி செஞ்சிலுவை பிரிவுச் செயலாளர் தெரிவிக்கிறார்.

'கடன் உதவி நிறுத்தம்', என்ற தலைப்பில் 10-05-95 ஆம் திகதி உதயனில் வெளியான செய்தி குறித்தே அவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

ஆசிரியர் குறிப்பு:

வலிகாமம் மேற்கு பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தில், பம்பாய் வெங்காய உற்பத்தியாளருக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக மக்கள் வங்கியிடம் கடனுதவி பெற்றுக் கொடுக்க முடிவாகியதாகவும் —

இது சம்பந்தமாக மக்கள் வங்கியுடன் அப்போது தொடர்பு கொள்ளப்பட்ட போதிலும் பின்னர் அது செயல்முறைக்கு வரவில்லை என்றும் — எமது செய்தியாளர் அறிவிக்கிறார்.

கைதடி, கயற்றசிட்டி
அருள்மிகு
கந்தசுவாமி தேவஸ்தான

வருடாந்த மஹோற்சவம்

03 - 07 - 1995 திங்கட்கிழமை பகல் 12-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

11 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு — தேர்த் திருவிழாவும்

12 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு — தீர்த்தத் திருவிழாவும்

நடைபெறும்.

தினமும்
மாலை 7-00 மணி தொடக்கம் 8-00 மணி வரை
இணுவையூர்
திரு ஆறு. திருமுருகன் செஞ்சொற்செல்வர்
அவர்களால்
பெரியபுராண
தொடர் விரிவுரை நடத்தப்படும்

ஆலய திருவிழாக்கான கடைகள் வழங்குதல் (ஏலம் போடுதல்) 23 - 06 - 1995 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம் பெறும்.

— ஆலய பரிபாலன சபையினர்.

கைதடி வடக்கு,
கைதடி.

[37151]

ஓராண்டு நினைவஞ்சலி



மகாலிங்கம் மணிவண்ணன்

(B. Sc. Electrical Engineering, Lakehead Thunderbay University, Canada)

அன்னை மடியில்:	ஆண்டவன் அடியில்:
14 — 05 — 1966	21 — 06 — 1994

திதி: 25 — 06 — 1995

மணிவண்ணா!

நீர் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றிடினும் எம் நினைவிலே, உயிர் மூச்சிலே ஒன்றாய்க் கலந்து விட்டீர் உமதம்மா அப்பா சகோதரர்கள் ஆகிய நாங்கள் தினமும் கண்ணின் நீரால் முகம் கழுவிக் கண்ணீர்ப் பூக்களால் உம்மை அர்ச்சித்து காலமெல்லாம் உம் நினைவால் கலங்குகிறோம் ஐயா. பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் விட்டு நாம் பெற்ற மகனின் அழைப்பை ஏற்று ஓடி வந்தோமையா. எம்முடன் சேர்ந்திருக்க மாட்டாமல் ஓடி நீர் சென்றது ஏனையா? நீர் பிறந்த நாட்டினிலே உம்மைப் பேணி வளர்த்தோம். நாம் சேர்ந்து உறவு கொண்டோரும் தவியாய்த் தவிக்கையிலே கனடா நாட்டினிலே உற்றார், உறவினரும், நண்பர் கூட்டத்தினரும் துடியாய்த் துடிக்கையிலே ஐயா நீர் பரமனடி சேர்ந்தீரோ? மணிவண்ணா எம் உயிர் உள்ள வரை உனை மறவோம்.

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அம்மா, அப்பா, தம்பிமார், தங்கை,
உறவினர்.

கனடா.

[37154]

குறைந்த விலை! தரமான பிரதி!!



போட்டோஸ்ரட் 5/- (காகிதாதி தனி)
றோணியோ 100க்கு -19/- ஸ்ரென்சில் 10/-
ரைப்பிங் தமிழ் -7/- ஆங்கிலம் - 8-50

(சி-1701)

இதய அஞ்சலி

19 - 06 - 1995 அன்று கொக்குத்தொடுவாயில் இடம்பெற்ற இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த

லெப்டினன்
தமிழ்மாறன் சத்தியராஜ்
(கனகரட்ணம் சிவகுமார்)
(தட்டாதெரு சந்தி)

அமரர்களுக்கு எமது இதய அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவலிங்கப்புளியடி
வாழ் இளைஞர்கள்.

(சி-1530)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு 1995 ஜூலை 14ஆம் தேதி வரை என்னால் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

1. *உடற்கல்விப் பணிப்பாளர்*

சம்பள அளவுத்திட்டம்: ரூபா 7,950 — 10 X 250— 10,450/- மாதமொன்றுக்கு.

தகைமைகள்:

அ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் உடற்கல்விப் பட்டம் அல்லது சமமான அல்லது உயர் தகைமைகளுடன் அத்தகைய பட்டத்தைப் பெற்றதன் பின்னர் பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்துவதில் குறைந்தபட்சம் 12 ஆண்டு அனுபவம்.

அல்லது

ஆ. அனுமதிக்கப்பட்ட பட்டப் பின் பட்டத்தை அல்லது உயர்தொழில் தகைமைகளைக் கொண்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி அவர் அப்பட்டத்தைப் பெற்றதன் பின்னர் பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்துவதில் குறைந்தபட்சம் 15 ஆண்டு அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

வயது:
45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு:
நேர்முகப்பரீட்சை மூலம்

2. *தாதி தரம் II (பெண்)*

சம்பள அளவுத் திட்டம்: ரூபா 2,890 — 10 × 55; 7 X 65 — 3,895/- மாதமொன்றுக்கு.

தகைமைகள்:

1. இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் 6 பாடங்களுடன் 3 பாடங்களில் திறமைச் சித்திகள்.
2. இலங்கை மருத்துவ அவையினால் தாதியாக அங்கீகரிக்கப்பட்ட தகுதிச் சான்றிதழ்.

வயது:
40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு:
உளச்சார்பறிதேர்வு, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம்.

3. *பொது சுகாதாரப் பரிசோதகர் தரம் II (ஆண்)*

சம்பள அளவுத் திட்டம்: ரூபா 2890 — 10 X 55; 7 X 65 — 3,895/- மாதமொன்றுக்கு.

தகைமைகள்:

சுகாதாரத் திணைக்களத்தினால் நடத்தப்படும் பொதுச் சுகாதார பரிசோதகர் பரீட்சையில் சித்திபெற்றிருப்பதுடன் தகைமை பெற்றதிலிருந்து குறைந்தபட் [illegible] அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.

வயது:
40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு:
உளச்சார்பறிதேர்வு, நேர்முகப்பரீட்சை ஆகியவற்றின் மூலம்.

4. *களஞ்சியக் காப்பாளர் தரம் III (ஆண்)*

சம்பள அளவுத்திட்டம்: ரூபா 2,745 — 10 X 55 — 7 X 65 — 3,750 மாதமொன்றுக்கு.

தகைமைகள்:

1. இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் க.பொ.த. (சாதாரண தர] பரீட்சையில் 6 பாடங்களுடன் 5 பாடங்களில் திறமைச் சித்திகள். க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் பெற்ற திறமைச் சித்திகளுள் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி அல்லது இலக்கியத்துடன் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம்/ கணிதம் என்பவை அடங்கியிருத்தல் வேண்டும்.
2. களஞ்சியத்தைப் பேணுவதில் அனுபவம் அல்லது கணக்கியலில் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகும்.

வயது:
40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு:
தேர்வு நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம்.

குறிப்பு:

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால்/ பல்கலைக்கழகத்தால் தீர்மானிக்கப்பட்டவாறு பிணை அளிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் இப் பல்கலைக்கழகத்தின் மக்கள் வங்கியிலோ, அல்லது பல்கலைக்கழகச் சிறாப்பரின் முகப்பு மேசையிலோ ரூபா 20/-ஐச் செலுத்தி இப் பல்கலைக்கழகப் பிரதிப் பதிவாளர்/ தாபனங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும், விவரங்களையும்பெறவிரும்புவோர் யாழ். பல்கலைக்கழக நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் 23X10 ச.மீ. அளவுடைய ரூபா 2/- முத்திரையொட்டப்பட்ட சுயமுகவரியிட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது நியமன அதிகாரிகள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். சேவையிலுள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது. ஓய்வு பெற்ற அலுவலர்களின் விண்ணப்பங்களும் ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவையில் சேர்த்துக் கொள்வதன் பொருட்டு பரிசீலனை செய்யப்படும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், விவரங்கள் தெளிவில்லாமல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1995 - 06 - 16

(சி/1524)

CIMA
Stage - I
IAB
All Stages

NOV / DEC 1995
புதிய பிரிவுகள்
ஆரம்பம்: **26 - 06 - 95**
பிரபல விரிவுரையாளர் குழு
✶ Bask. Lotus, Short hand Typing
நடைபெறுகின்றன

விவரங்களுக்கு:
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3rd, CROSS STREET,
JAFFNA.

(சி/1529)

விற்பனையாகின்றன

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்
பரீட்சைக்குரிய

பொது விவேகம் 97/-

[புதிய பாடத்திட்டத்திற்குரியது]

ஆசிரியர்: தி. லோகநாதன்
வெளியீடு: அஸ்ரன் பதிப்பகம்

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
✶ 18% கழிவுடன் மொத்தமாகப் பெறவிரும்பின்

யாழ்ப்பாண புத்தக நிலையம்
448, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-1703]

யாழ். சென் ஜேம்ஸ்
மகா வித்தியாலயம்

முத்தமிழ் விழா

இடம்: **வித்தியாலய மண்டபம்**
காலம்: **இன்று 21 — 06 — 95 பி.ப 1-30 மணி**
தலைவர்: **திரு. S.S தங்கராசா** [அதிபர்]
பிரதம விருந்தினர்: **திரு. த. துரைசிங்கம்**
(பிரதிக் கல்விப் பணிப்பாளர் யாழ். நல்லூர்)

ஆசியுரை வழங்குபவர்:
பங்குத் தந்தை வண. பிதா
திரு. நேசநாயகம்
திரு. த. தானையா (உ. க. ப.)
திருமதி வி. கார்த்திகேயன் (உ. க. ப.)
செல்வி வாசுகி
(மகளிர் அமைப்புப் பொறுப்பாளர்
யாழ். மாவட்)

சிறப்பு நிகழ்ச்சியாக யாழ். மாவட்ட தமிழ் தினப் போட்டியில் முதலாம் இடம்பெற்ற இக் கல்லூரியின்

நடன நிகழ்ச்சியும்

கதகளி பரத கலாமணி

இலங்கை வேந்தன்

பங்கு பற்றும்

பண்டாரவன்னியன்

நாடகமும் இடம்பெறும்

இலங்கை வேந்தன் தோற்றம்

அன்புடன்
தமிழ் மன்றம்
சென் ஜேம்ஸ் ம. வி. குருநகர்.

விழா சிறப்புற வாழ்த்துபவர்:
★ **கணேசா நகையகம்** ★
இல. 194, சந்தோசம் தெரு [கஸ்தூரியார் வீதி]
யாழ்ப்பாணம்.

[37166]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

நிரப்ப முடியாத இடைவெளி!

பதில் பிரதம நீதியரசராகக் கடமையாற்றிய ஆர். ஏ. வனசுந்தரா தலைமையில், பல்வேறு துறைசார் பிரமுகர்கள் 26 பேர் சேர்ந்து, சமஷ்டித் தீர்வு முறைக்கு எதிராக வெளியிட்ட அறிக்கை கொழும்புப் பத்திரிகைகளில் முக்கிய இடம்பிடித்துள்ளது.

இலங்கை தொடர்ந்தும் ஒற்றையாட்சி முறையின் கீழேயே ஆளப்படவேண்டும்; சமஷ்டி ஆட்சி முறை நாட்டுக்கு நாசகாரத்தை விளைக்கும்—

சமஷ்டி அமைப்பினால் நாட்டின் சமாதானம், சௌஜன்யம், சகோதரத்துவம் பாதிக்கப்படும்—என்ற கருத்தைச் சொல்லும் விதத்தில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம்; வடக்கு கிழக்கு அவர்களின் பாரம்பரிய தாயகம்; அவர்களுக்குச் சுயநிர்ணய உரிமையுண்டு என்ற நிலைப்பாடுகளை வெறும் கட்டுக்கதைகளாகக் காட்டி இந்த அறிக்கை எழுதப்பட்டிருக்கிறது.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று தயாரிக்கப்படும் பட்சத்தில் அது சமஷ்டி முறையாக அமைந்து விடக்கூடாது என்பதனைத் தடுக்கும் நோக்குடனேயே இந்த அறிக்கை எழுதப்பட்டிருக்கிறது.

நாட்டின் ஒற்றுமை, சமத்துவ வாழ்வு என்ற கோஷங்களை முன்னிறுத்தி, தமிழர்களின் உரிமைகளை முற்று முழுதாக மறுக்கும், எதிர்க்கும் நோக்கம் இந்த அறிக்கையில் பரவிக் கிடப்பதைக் காணலாம்.

சமஷ்டி என்பது சிங்களவர்களைப் பொறுத்தமட்டில் அசுத்தமான வார்த்தையாகவே இருந்து வருகிறது. ஈழப்போர் இரண்டில் இராணுவத் தரப்பில் ஏற்பட்ட இழப்புகள், அந்த எண்ணத்தைச் சற்று மாற்றியதாக நம்பப்பட்டது. சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டாலும் அதனை எதிர்க்காமல் இருக்கும் அளவுக்கு சிங்கள மக்களிடையே மனமாற்றம் உண்டாகியிருப்பதாகவும் கருதப்பட்டது! நம்பப்பட்டது.

ஆனால் அந்த நம்பிக்கை வீணானது என்பது, இப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இனப்பிரச்சினைக்கான தனது தீர்வு என்ன என்பதனை அரசாங்கம் வெளியிடாமலே மெதுவாக வேண்டுமென்றே நழுவிக்கொண்டது.

அரசாங்கத் தரப்பில் இப்படி ஓர் தளர்வு வரும்போது சமஷ்டித் தீர்வுக்கு எதிர்ப்பு உண்டாகும்; அவ்வாறே உருவாகட்டும் என்று திட்டமிட்டே சந்திரிகா இனப்பிரச்சினை விவகாரத்தில் தமது அணுகுமுறைகளையும் நடைமுறைகளையும் மாற்றிக் கொண்டார்!

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக வெளியே காட்டிக்கொண்டு, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தடுக்குமாறு நாசகார சக்திகளைத் தூண்டி விடுவது சிங்கள அரசியல் தலைவர்களுக்குக் கை வந்த கலை. அதனையே சந்திரிகாவும் செய்திருக்கிறார்.

சமஷ்டி முறையிலான தீர்வு தான் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை ''இட்ட முட்ட'' வாகுதல் பூர்த்தி செய்யும்; தமிழீழத்துக்கு மாற்றுத் தீர்வாக அமையும் என்ற கருத்து இப்போது தென்னிலங்கையில் முற்றாக மாறும் நிலைக்கு வந்துவிட்டது.

தமிழர்களைப் பொறுத்தவரையில், சுயநிர்ணய உரிமையை உறுதி செய்யும் தன்னாட்சி அதிகாரம் உள்ள ஒரு தீர்வே ஆகக் குறைந்த, ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வாக அமையும்.

இந்த இரண்டு நிலைகளுக்கும் இடையில், மிகப் பெரிய, நிரப்பமுடியாத, இடைவெளி உள்ளது. தமிழர்கள் அரசியலில் பேரம் பேசக்கூடிய பலத்துடன் மேலோங்கி நின்றால் மட்டுமன்றி தமது அரசியல் அபிலாஷைகளை அடையமுடியாது என்பதனை ''26 பேர் அறிக்கை'' மிகத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

பிரேமா மீதான குற்றச்சாட்டால் சந்திரிகாவுக்கு சட்ட நெருக்கடி?

கொழும்பு. ஜூன் 21 தனது கணவன் விஜேகுமாரதுங்க கொலைக்கு காலஞ்சென்ற பிரமதாசா மீது ஜனாதிபதி சந்திரிகா குற்றஞ்சாட்டியிருப்பது சட்ட நெருக்கடி ஒன்றை ஏற்படுத்தி இருப்பதாக சண்டேரைம்ஸ் வார இதழ் தெரிவிக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா விஜய குமாரதுங்கவின் படுகொலையைப் பற்றி விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நிமமித்துவிட்டு இத்தகைய கூற்றை வெளியிட்டிருப்பது மிகவும் தவறானது என்று சட்டநிபுணர்கள் கருதுகின்றார்கள்.

ஜனாதிபதிக்கு உள்ள விசேஷ அதிகாரங்களின் கீழ் அவருக்கு எதிரான நடவடிக்கை அவ்வளவு பயன் தராது என்றபோதிலும், பிரேமதாசாவின் புத்திரி துலாஞ்சலி விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழுவின் அனுமதியை பெற்று சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளார் என அறியப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா மேற்குறிப்பிட்ட தனது கூற்றின் மூலம் விசாரணை முடிவதற்கு முன்னரே தீர்ப்பு வழங்கி விட்டார் என்பதே துலாஞ்சலியின் வாதமாகும். [இ-ஊ]

அறிவியல் கருத்தரங்கு

சாவகச்சேரி, ஜூன் 21 சாவகச்சேரி நகரசபை பொது நூலக வாசகர் வட்டத்தினால் நடத்தப்படும் மாதாந்த அறிவியல் கருத்தரங்கு இன்று புதன் பிற்பகல் 3-30மணிக்கு சாவகச்சேரி நகரசபை சபா மண்டபத்தில் வாசகர் வட்டத் தலைவர் திரு. சி. நடராசா தலைமையில் நடைபெறும். (இ 31)

தேரரின் கொலையுடன் முகாமும் மூடப்பட்டது

கொழும்பு ஜூன் 21 திம்புலாகல தேரரின் படுகொலையை அடுத்து, கல்லராவ பகுதி மக்கள் அங்கிருந்து வெளியேறி விட்டனர் என்றும் அங்கிருந்த இராணுவ முகாமும் அகற்றப்பட்டு விட்டதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப் பகுதியில் தென் இலங்கை மக்கள் குடியேற்றப்பட்டதுடன் இவர்களுக்குப் பாதுகாப்பாக இராணுவ முகாமும் அமைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

தற்போது தேரரின் கொலையை அடுத்து அப்பகுதி மக்கள் அங்கிருந்து வெளியேறி விட்டனர். இவர்களுக்கு பாதுகாப்பாக அமைக்கப்பட்ட இராணுவ முகாமும் அகற்றப்பட்டு விட்டது. [இ-5]

எல்லைக்கிராம பாதுகாப்பு: 15 ஆயிரம் ஊர்காவலர்கள்

வடக்கு - கிழக்கு எல்லைக் கிராமங்களைப் பாதுகாக்க சுமார் 15 ஆயிரம் ஊர் காவலர்கள் சேர்க்கப்பட இருக்கிறார்கள் என்று சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் கூறினார்கள்.

இவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் ''ரிப்பீட்டர்'' துப்பாக்கிகள் வழங்கப்படும்.

இவ்வாறு பயிற்சி பெற்ற ஊர் காவலர்களைக் கொண்டு விழிப்புக் குழுக்கள் அமைக்கப்படும் எனவும் அவர்கள் கூறினார்கள். [இ-ஊ]

அந்நியபடை தேவையில்லை என்கிறார் சரத்முனசிங்க

கொழும்பு, ஜூன் 21 ''எங்களிடம் போதிய ஆயுதங்களும் வெடிமருந்துகளும் இல்லை இவற்றைப் பெறுவதற்கு அந்நிய உதவி கிடைக்குமாயின் அதுஉதவியாக இருக்கும் ஆனால் எமக்கு வெளிநாட்டுத் துருப்புகள் தேவை இல்லை''

ராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க ''சண்டே ரைம்ஸ்'' வார இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு கூறினார். (ஊ)

ஐ. தே. கட்சியின் எம். பி. சந்திரிகாவுக்குச் சவால்

கொழும்பு, ஜூன் 20 விஜயகுமாரதுங்க படுகொலை செய்யப்படுவதற்கு 10 நாட்களுக்கு முன்னர் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார். என்ற கூற்றையும் —

அப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சி பிரேமதாசவை அதன் வேட்பாளராக நிறுத்தத் தீர்மானித்திருந்தது என்ற கூற்றையும் — ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிருபிக்க முடியும் என்றால் தாம் நாடாளுமன்றத்தில் இருந்து ராஜினாமாச் செய்வார் என்று ஐ.தே.க தேசியப் பட்டியல் எம்.பி சரத் கொங்கஹாகே கூறினார்.

இக்கூற்றுக்களை நிருபிக்காவிடின் சந்திரிகா தமது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் அவர் கோரினார்.

விஜயகுமாரதுங்க, பிரேமதாச ஆகிய இருவரும் ஜனாதிபதி சந்திரிகா கூறியவாறு ஜனாதிபதி வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் அவர் கூறினார். [இ-ஊ]

நெடுங்கேணியில் பரவும் வயிற்றோட்ட நோய்

இதுவரை 5 சிறுவர்கள் பலி

வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் தீவிரமாகப் பரவி வரும் வயிற்றோட்டத்தால் இதுவரை 5 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் மேலும் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

நெடுங்கேணியில் ஒலுமடு, கேசுட்டான், தட்டாமலை கிராமங்களில் நோயின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

நோயைக் கட்டுப்படுத்த தேவையான மருந்துகள் இருக்கின்ற போதும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டால் அவற்றை எடுத்துச் செல்ல முடியாது உள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். [ஒ-3]

மரணித்த ஊழியரின் தாய்க்கு 10 ஆயிரம் ரூபா

யாழ்ப்பாணம், ஜூன் 21 நோயால் மரணமடைந்த வெதுப்பக ஊழியர் ஒருவரின் மறு உரித்தாளியான தாயாருக்கு வெதுப்பக உரிமையாளரால் 10 ஆயிரம் ரூபா நன்கொடையாக அண்மையில் வழங்கப்பட்டது.

யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் சிபார்சில் வடமராட்சியில் உள்ளதோர் வெதுப்பகம் வெதுப்பக உரிமையாளர் நம்பிக்கை நிதியத்திலிருந்து இக்கொடுப்பனவை வழங்கியது. இதுவே நிதியத்தின் முதல் கொடுப்பனவு என்பது குறிப்பிடத்தக்கது.

வெதுப்பக ஊழியர் நலன் கருதி மேற்படி சங்கம் நிதியத்தை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்திவருகிறது.

மேலும் கடந்த 11ஆம்திகதி நடந்த நிதியத்தின் பொதுக் கூட்டத்தில் ஒரு ஊழியர் நோயுற்று அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று அதற்குரிய மருத்துவச் சான்றிதழைச் சமர்ப்பி[illegible]சத்தில் அவருக்குரிய சம்பளத்தைக் கொடுப்ப[illegible] தீர்மானிக்கப்பட்டது (ஊ)

சைவசமய பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 21 இணுவில் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு இணுவில் இந்துசமய வளர்ச்சிச் சங்கமும், ஆலய இளந்தொண்டர் சபையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சைவசமய அறிவுப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (ஊ-14)

த. பொ. க செயன்முறைத் தேர்வுகள்

வலிகாமம் தெற்கு, ஜூன் 21 யாழ்ப்பாணம் கல்வி மேம்பாட்டு பேரவையினரால் நடத்தப்படும் தமிழீழ பொதுக் கல்வித் தேர்வுகளின் செயன்முறை தேர்வுகள் ஜூலை மாதம் முதலாம் திகதியில் இருந்து 17ஆம் திகதி வரை நடைபெறும் என தேர்வு ஆணையாளர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

தொழில்நுட்பக் கல்விக்கான பாடங்களின் செயல் முறைத் தேர்வு ஜூலை முதலாம் திகதி முதல் மூன்றாம் திகதி வரையும்—

அழகியல் பாட தேர்வு ஜூலை 6ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரையும்—

விஞ்ஞான பாட தேர்வுகள் ஜூலை 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரையும் நடைபெறும் என அவர் அறிவித்துள்ளார். (இ-152)

நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 21 இ. கிருஷ்ணகுமாரின் 'களி மண்பதிவுகள் முதல் கணனிப் பதிவுகள் வரை' என்னும் நூல் வெளியீடு இன்று புதன் கிழமை பிற்பகல் 4மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் இடம் பெறும்.

பேராசிரியர் நா பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பேராசிரியர்கள் பொ. பாலசுந்தரம் பிள்ளை, கா. சிவத்தம்பி ஆகியோர் அறிமுகவுரை நிகழ்த்துவர். (இ-14)

புலிகளின் குரல் வானொலியில்

21 — 06 — 1995

புதன் இரவு

★ 8-02 — குயிலோசை நிகழ்ச்சியில் ந. கோகுலன் எழுதிய ''மரபுவழி இசை நாடகப் பாடல்கள்'' கிராமிய நிகழ்வு
★ 8-20 — வாத்திய கானங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — நாடகம் தமிழ்க்கவி எழுதிய ''நாங்கள்விட்ட பிழை''

22 — 06 — 1995

வியாழன் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — விடுதலை கீதங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 8-00 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

தமிழீழ வானொலியில்

புதன் மாலை

★ 5-01 — சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — படப்பாடல்
★ 5-30 — அறிவூற்று
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — உங்கள் தெரிவு
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
விளையாட்டுச் செய்தி [illegible]
மீண்டும் உங்கள் தெரிவு
★ 6-30 — [illegible] யாவும் நிறைவு பெறும்.

கட்டாக்காலி நாய்கள் பிடிப்பதிலும் பாகுபாடா?

யாழ்ப்பாணம், ஜூன் 21 உள்ளூராட்சி சபைகள் பலவும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதில் இப்போது ஈடுபடுகின்றன.

சில சபைகள் பிடிக்கப்படும் நாய்களை அன்றைய தினமே அழித்தும் விடுகின்றன.

வீதிகளில் அலைந்த தமது நாய்கள் பிடிக்கப்பட்டதும் மக்கள் துடித்துப் பதைத்து அதனைத் திருப்பித் தருமாறு நாய்பிடி ஊழியர்களிடம் முறையிடுகின்றார்கள். ஆனால் அநேகமாக அந்தக் கோரிக்கை வெற்றி பெறுவதில்லை.

யாழ். குடாநாட்டில் கிழக்குத் திசையில் பிரதேச செயலர் பிரிவு ஒன்றில் அண்மையில் நடந்த நிகழ்ச்சி இதற்கு முற்றிலும் மாறானதாகும்.

பிரதேச செயலரின் நாய் கட்டாக்காலியாகப் பிடிக்கப்பட்டது: இதனால் அன்று பிடிக்கப்பட்ட நாய்கள் அத்தினமே அழிக்கப்படவில்லை! மறுதினம் பிரதேச செயலரின் நாயை வீட்டில் மீண்டும் கொடுத்த பின்னரே மற்ற நாய்கள் அழிக்கப்பட்டன.

பிரதேச செயலரின் நாய்க்கு ஒரு சட்டம், பொது மக்களின் நாய்களுக்கு இன்னொரு சட்டமா என்று சம்பந்தப்பட்டபகுதி மக்கள்மத்தியில் கேள்வி எழுந்துள்ளது. [ஊ]

ரெலோ தாக்குதல்

ஆரையம்பதி செல்வாநகர் கிழக்கில் வாழும் தமிழர்கள் அண்மையில் ''ரெலோ'' அமைப்பினரால் தாக்கப்பட்டனர் என்று கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆரையம்பதி இராணுவ முகாமைச் சேர்ந்த படையினர் மூவருக்கு சாராயம் வாங்கிக்கொடுத்து அவர்களை அழைத்து வந்து ரெலோ அமைப்பினர் மூவரே இத்தாக்குதலை நடத்தியதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (இ-5]

தமிழ்த்தின விழா

கைதடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் தமிழ்த்தினவிழா இன்றுபுதன் கிழமை வித்தியாலய மண்டபத்தில் அதிபர் இ. செ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும். (இ-117]

ராணுவத்திலிருந்து விலகியோரில் 5,000பேர் களுத்துறைமாவட்டத்தவர்

கொழும்பு, ஜூன் 21 இராணுவத்தை விட்டு சொல்லிக் கொள்ளாமல் விலகிச் சென்றவர்களில் அனேகர் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

இவ்விதம் விலகிச் சென்றோரில் 5 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பெரும்பான்மையோரின் இருப்பிடத்தை அறிய முடியவில்லை என்றும் —

இவர்களுடைய குடும்பத்தவர்கள் இவர்களுக்கான கடிதங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர் என்றும் களுத்துறை மாவட்ட கிராம அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தப்பி ஓடிய ராணுவத்தினருக்கு நீதிமன்றத்தால் பகிரங்க வாரன்ட் பிறப்பிக்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது. (இ-ஊ)

தமிழர்கள் மீதான துன்புறுத்தல் நீடிப்பு

கொழும்பில் தமிழர்கள் தொடர்ச்சியாக சிங்கள இளைஞர்களால் தாக்கப்பட்டும் மிரட்டப் பட்டும் வருகிறார்கள் என கொழும்பு வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தெஹிவளை — வெள்ளவத்தை வீதியில் விஜேரத்ன மாவத்தையில் இத்தகைய சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன.

இப் பகுதி கடற்கரைக்கு வரும் தமிழர்களை சிங்கள இளைஞர்கள் வழிமறித்து அடித்து மிரட்டுகின்றனர்.

தமிழர்கள் கொண்டு செல்லும் பணம் உட்பட பெறுமதியான பொருள்களையும் அவர்கள் பலவந்தமாகப் பறிக்கின்றனர்.

இவ்வாறு சிங்கள காடையர்களின் மிரட்டல்களுக்கு உள்ளாகி தமது பேர்ஸ் பணம் என்பவற்றை இழந்த தமிழர்கள் பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று முறையிட்டாலும், அங்குள்ள பொலிஸார் அதனைப் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லையாம்.

இவ்வாறான முறைப்பாடுகளை தாங்கள் ஏற்க மாட்டோம் என்று கூறி பொலிஸார் தமிழர்களை விரட்டியடிக்கின்றனர்.

நீண்ட காலமாக நடைபெற்று வரும் இத்தகைய செயல்கள் — தற்போது தெற்கில் நிலவும் இன வன்முறைச் சூழலில் மேலும் மோசமடைந்துள்ளதாக அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-5]

மக்கள் வங்கி கடன்

சைக்கிளில் சென்றுவியாபாரம் புரிவோர், அப்பளத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பேக்கரி தொழிலில் ஈடுபட்டுள்ளோர் போன்ற முயற்சியாளர்களுக்கு மக்கள் வங்கி கடன் வசதியினை வழங்கி வருவதாக மக்கள் வங்கி யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் திரு. அருளானந்தம் தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாகசபை பிரச்சினைக்கு தீர்வாகாது

அதனை நிராகரித்து ஆனந்தசங்கரி கருத்து

கொழும்பு ஜூன் 21 வடக்கு—கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை நிறுவும் யோசனையை தமிழர் விடுதலைக் கூட்டணி நிராகரித்துள்ளது.

கூட்டணியின் உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி இது பற்றித் தெரிவிக்கையில்,

தற்காலிக யோசனைகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் பரிகாரம் காண முடியாது. இதனால் இடைக்கால நிர்வாக சபையில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு நம்பிக்கை இல்லை என கூறினார்.

இனப் பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வுத் திட்டம் ஒன்றை அரசு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

வடக்கில் பாரிய தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முன்னர் அரசாங்கம் தனது அரசியல் தீர்வுத் திட்டத்தை வெளியிட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட தமிழ்க் கட்சிகள் அனைத்தும் சமீபத்தில் கோரிக்கை விடுத்திருந்தன.

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை அமைக்கும் யோசனை வெளியிடப்பட்டதை அடுத்து, தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் அரசியல் தீர்வை வெளியிடுமாறு அரசுக்கு தாம் விடுத்த நெருக்குதலைக் கைவிட்டு விட்டன என்று நம்பப்படுகிறது.

அதே சமயம் இடைக்கால நிர்வாகசபை குறித்து ஆராய்வதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட பல தமிழ்க் கட்சிகளை நாளை வியாழக்கிழமை சந்திப்பதற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

திருமலையில் 'வெள்ளைவானை' நம்பி பிழைப்பு நடத்தும் கூட்டம்

கொழும்பு, ஜூன் 21 திருகோணமலையில் ''வெள்ளை வானை'' நம்பி பிழைப்பு நடத்துவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

''யமனின் எருமைக்கடா'' வாக மக்களால் நோக்கப்படும் இந்த வெள்ளை வானின் நடமாட்டம், திருகோணமலையில் பரவலாக அதிகரித்துள்ளது.

இளைஞர்கள் பலர் அன்றாடம் இந்த வெள்ளை வானின் பிடியினுள் அகப்படுகின்றனர்.

இவ்வாறு வெள்ளை வான் ஆசாமிகளால் பிடிக்கப்படுவோரை மீட்டுத் தருவதாகக் கூறி அங்கு இன்று பலர் தரகுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இந்த வெள்ளை வானை நம்பியே இவர்கள் பிழைப்பு நடத்துகின்றனர்.

இவர்களிடம் ஏமாந்து பணத்தைக் கொடுப்போரும் [illegible] இவர்கள் ஏமாற்றுவதைத் தெரிந்து கொண்டு பணம் கொடுக்க விரும்பாமல், ஆனால் தம்மையும் ஏதாவது பொய் சொல்லி மாட்டி விடுவார்களோ என்ற பயத்தினால் பணம் கொடுப்போரும் உண்டு.

யுத்த நிறுத்தம், நிலவிய போது மீன்பிடிப் படகுகள் வெளியிணைப்பு இயந்திரங்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை சிலர் திருகோணமலைக்கு கொண்டு சென்றனர்.

தொழில்நிமித்தம் கொண்டு செல்லப்பட்ட இவற்றிற்கு ''பயங்கரவாத நடவடிக்கைக்காக கொண்டுவரப்பட்டவை'' என பொய் முத்திரை குத்தப்பட்டு— உண்மை திரிக்கப்பட்டு— தமிழர்களின் வீடுகளில் தேடுதல் நடவடிக்கைகள் அடிக்கடி இடம்பெறுகின்றன.

இவ்வாறான இயந்திரங்கள் மோட்டார்கள் என்பனவும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றின் உரிமையாளர்கள் படையினரின் விசாரணை முகாம்களில் இருக்க— படையினருக்கு பின்னால் இருப்பவர்கள் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வாகனங்களில் மிக ஒய்யாரமாக ஓடித்திரிகின்றனர்.

இதே சமயம் திருகோணமலையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை நுழைவாயிலில் வைத்தே பயணிகள் நுணுக்கமாக சோதனையிடப்படுகின்றனர்.

சைக்கிளோட்டிகள் மற்றும் பஸ், வான் பிரயாணிகள் இறக்கி நடக்க வைக்கப்படுகின்றனர்.

எவ்வளவுதான் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ள போதிலும் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் நாளுக்குநாளும், நகரை அண்டிய பகுதிகளிலும் இருக்கவே செய்கிறது என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது. [இ-5]

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
16
—
06
—
1934

மறைவு:
02
—
07
—
1994

அமரர்

இராமநாதன் இரத்தினவிநாயகர்

(முன்னை நாள் பிரதம எழுதுநர் / நிர்வாகச் செயலாளர் கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்)

திதி: 21 — 06 — 1995

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

மனைவி, மக்கள்,
மருமகன், பேரன்.

''ஜெயபதி''
24/6, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

(37157)

மரண அறிவித்தல்கள்

நல்லதம்பி வீரசிங்கம்

(விஷ வைத்தியர்)

வரணி, நாவற்காட்டைச் சேர்ந்த விஷ வைத்தியர் நல்லதம்பி வீரசிங்கம் 19-06-95 இரவு சிவபதமடைந்தார். இவர், வள்ளியம்மையின் அன்புக் கணவரும், தில்லைநடராசா, புனிதவதி, காலஞ்சென்ற நல்லதம்பி, குமுதவதி, வனசவதி, சடாட்சரம் ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராணி, சிவானந்தராசா, விசாளாச்சிப்பிள்ளை, காசிநாதர், கதிர்காமத்தம்பி, யோகநாயகி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற கார்த்திகேசு (முன்னைநாள் முள்ளிப்பற்று கிராமசபைத் தலைவர்), தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற விஷ வைத்தியர் அம்பலவாணபிள்ளை, முருகேசு (முன்னைநாள் வரணி கிராமசபைத் தலைவர்), அழகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் 20-06-95 அவரது இல்லத்தில் நடைபெற்று குடமியன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி. தில்லைநடராசா,
வி. சடாட்சரம்.
(மகன்மார்)

நாவற்காடு,
வரணி.

(37160)

M. S. பஸ்தியாம்பிள்ளை

[ஊர்காவற்றுறை]

இளைப்பாறிய துறைமுக அதிகார சபை மேற்பார்வையாளர் M. S. பஸ்தியாம்பிள்ளை 19-6-1995 இல் காலமானார். இவர் ஊர்காவற்றுறை காம்ப் வீதியைப்பிறப்பிடமாக கொண்டவரும், சந்தணமலரின் [குணம்] அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வர், சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், பிறக்ஸிற் [ஆசிரியை, புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்], தியூஜின் [ஜேர்மனி], கிளன்ஸி [புனித அந்தோனியார் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று [21-06-95] மு. ப. 9.00 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
யோ. றெஜி கிளஸ்ரன்

41/1, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

[37167]

திருமதி பவளமணி பரராசசிங்கம்

திருமதி பவளமணி பரராசசிங்கம் [20-6-95] நேற்று சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தொல்புரம் வழக்கம்பரை பரராசசிங்கம் உபாத்தியாயரின் அன்பு மனைவியும், வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம், ஆதிலட்சுமி ஆகியோரின் அன்பு மகளும், சின்னத்துரையின் சகோதரியும், திருமதி யோகராணி பொன்னுராசா, கவீந்திரன், திருமதி பவானி மருதவாணர், சேகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி விமலாதேவி சேகரனின் அன்பு மாமியாரும், சரவணபவன், றோகினி, நந்தினி, ரமணன், பிரசன்னாத், சுகன்யா, பிரதாபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-6-95) காலை 10.30 மணிக்கு 465/16, பருத்தித்துறை வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
இ. பொன்னுராசா
(மருமகன்)

465/16, பருத்தித்துறை வீதி,
மனோன்மணி அம்மன் கோவிலடி,
நல்லூர்.

(37168)

சண்டிலிப்பாய் பிரதேச

குடிசைப்புனரமைப்புக்கான அமைச்சின் பணம் போதாது

குருநகர், ஜூன் 21

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கான ஆயிரத்து 750 குடிசைகளையும் மேய்வதற்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சால் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக பிரதேச செயலரும் மேலதிக அரச அதிபருமான திரு. து. வைத்திலிங்கம் தெரிவித்தார்.

தற்சமயம் அனுப்பப்பட்டுள்ள பணத்தில் 842 குடிசைகள் மட்டுமே வேய்வதற்கு முடியுமென்றும்

மேலும் 20 லட்சம் ரூபா வந்து சேர்ந்தால்தான் முழுக் குடிசைகளையும் வேய்வதற்கு முடியுமென்றும் அவர் தெரிவித்தார். [க-4]

யாழ் மாவட்டத்தில்

விசர் நாய்க்கடி மரணம் அதிகரித்து வருகிறது

வலிகாமம் தெற்கு, ஜூன் 21

தெரு நாய்களின் கடிக்கு இலக்காகும் பலர் போதிய சிகிச்சை பெறாது அசட்டையாக இருப்பதால் மரணமடைவது யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்து வருவதாக தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த வாரம் விசர்நாய்க்கடிக்கு இலக்கான இருவர் மரணமடைந்துள்ளனர்.

விசர்நாய்க் கடியினால் பாதிப்படைந்த கோப்பாய் தெற்கைச் சேர்ந்த ரி. ஷைலா என்ற 25 வயது இளம் பெண் விசர்நாய்க்கடிக்கான சிகிச்சை பெற தவறியமையால் மரணமானார்.

இவர் ஒரு மாதத்துக்கு முன் விசர்நாய்க்கடிக்கு ஆளாகிய போதும் விசர்நாய்க்கடிக்கான தடுப்பு ஊசி மருந்தை (ஏ. ஆர். வி) பாவிக்காது கவனமின்றி இருந்ததாலேயே மரணம் சம்பவித்தது என தெரிவிக்கப்பட்டது.

இதேபோல சண்டிலிப்பாய் தொட்டிலடியை சேர்ந்த சின்னவன்முருகேசு (வயது 65) என்ற வயோதிபரும் நாயினால் கடியுண்ட பின் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். (க-152)

இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் குருநகர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார். [உ-15]

தபால்களை சேர்க்குக!

யாழ்ப்பாணம், ஜூன் 21

எதிர்வரும் சனிக்கிழமை பருத்தித்துறையில் இருந்து புறப்படவுள்ள ''ஹபரண'' கப்பலில் தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்பட இருக்கிறது.

இதற்கு ஏதுவாக எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக வெளியூர் தபால்களை தபால் பெட்டிகளில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் கேட்டுள்ளார். (உ-4)

விளையாட்டு நிகழ்வு

கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடக்கும் கால் இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:—

★ 4 மணி — மயிலிட்டி கலைமகள் அணி எதிர் சுன்னாகம் கலைவாணி அணி

★ 5 மணி— மயிலிட்டி வள்ளுவர் அணி எதிர் இணுவில் அண்ணா அணி [உ-3]

தேசத்துரோகிக்கு மரண தண்டனை

யாழ்ப்பாணம், ஜூன் 21

அம்பாறையில் தேசத்துரோக நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவருக்கு விடுதலைப் புலிகள் வெள்ளியன்று மரண தண்டனை வழங்கியுள்ளனர்.

கோமாரியைச் சேர்ந்த ஜீவரத்தினம் தளையசிங்கம் அல்லது மைக்கல் என்ற தேசத்துரோகிக்கே மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இவர் ஸ்ரீலங்கா பொலிஸ் அதிரடிப் படையினருடன் இணைந்து தமிழ்மக்களை துன்புறுத்தி வந்துள்ளதுடன் விடுதலைப்புலிகள் தொடர்பான தகவல்களையும் வழங்கி வந்துள்ளார். (ஓ-3)

சைக்கிள் உருமத்தகடுகள்

எதிர்வரும் ஜூலை பத்தாம் திகதிக்கு முன்னர் சைக்கிள் பாவனையாளர்கள் அனைவரும் உருமத்தகடுகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என தமிழீழ நிர்வாக சேவை அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களினால் விநியோகிக்கப்படும் உருமத்தகடுகளை கொண்டிராத சைக்கிள்கள் தொடர்பான உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகளுக்கு நிர்வாக சேவையினர் பூரண ஒத்துழைப்பு வழங்க உள்ளனர். (க-152)

கலை பண்பாட்டுக்கழக ஆதரவுடன்
நிதர்சனம் தயாரித்து வழங்கும்
ஞானரதனின்
"முகங்கள்"
வீடியோ பட வெளியீட்டு விழா

இடம்:- யாழ்- ஸ்ரீதர் திரையரங்கு
காலம்:- இன்று பிற்பகல் 3.00 மணிக்கு

சிறப்புப் பிரதி பெறுவோர்:

சிவராசா சிவஜீவன், ஸ்கைலைன்ஸ், மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
பே. குணேஸ்வரன், நியூ ஆனந்தா நகைமாடம்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ச. நேசராசா, புனிதா நகைமாளிகை,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சரவணமுத்து பரஞ்சோதி, வெங்கடேஸ்வரா,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
பேரம்பலம் நாகரட்ணம், E S P,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
க. அருள்நேசன், சிவகணேசன் புடவை மாளிகை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
த. சற்குணராசா, திருமாட்டி புடவைக்கடல்,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
ஆறுமுகம் குணரட்ணம், குகன் பிரோஸ்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
வை. நமசிவாயம், இளவரசி புடவை அகம்,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
சின்னத்துரை ஜெயகாந்தன், ''ஜெயா அழகு மாடம்''
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
S. M. பெர்னான்டோ, 280, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
இராசன் [illegible]
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி/1532)

பிரசவத்தாய் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்ட பிரசவத்தாய் ஒருவர் நோய் மிகுதியால் மரணமானார்.

வரணியைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி சிவசுந்தரி (வயது30) என்ற நான்கு குழந்தைகளின் தாயாரே மரணமானவராவர்.

திங்கள் அதிகாலை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் தனது நான்காவது குழந்தையை பிரசவித்த இத்தாயார் பிரசவித்த நேரத்தில் இருந்து இரத்தப் பெருக்கு அதிகரித்து உயிராபத்தை நெருங்கிக் கொண்டிருந்தார் என்றும் —

அங்குள்ள அம்புலன்ஸ் இயங்காத நிலையில் சிலமணி நேரங்களின் பின் வாடகைக் கார் ஒன்றின் மூலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டார் என்றும் —

யாழ். ஆஸ்பத்திரியில் அதிதீவிர சிகிச்சை அளித்த போதும் சிகிச்சை பலனளிக்காது அவர் மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-13-15)

பொ.ஐ.முன்னணி.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துக்கும் முஸ்லிம்காங்கிரஸுக்கும் இடையில் முறுகல் நிலையைத் தோற்றுவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோல —

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஜூலை 15 க்கு முன்னர் ஒழிப்பது என்ற உறுதிமொழியைச் செயற்படுத்தாது அதனை ஒத்திப் போடுவது என்ற சந்திரிகாவின் முடிவால் அமைச்சர் ஸ்ரீமானி அதிருப்தி அடைந்துள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பதே லலித்தின் கொள்கையாக இருந்தது அதனை முக்கிய நோக்கமாகக் கொண்டே ஸ்ரீமானி அத்துலத் முதலி பொ. ஐ மு அரசில் சேர்ந்தார்.

எனவே நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பை பிற்போடுவதானால் அதற்கு மக்கள் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் —

இல்லையேல் தமது கட்சியின் ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாக— அமைச்சர் ஸ்ரீமானி அரசுக்குத் தெரியப்படுத்தி உள்ளார்.

அஷ்ரப்பும், ஸ்ரீமானியும் தமது கட்சிகளின் ஆதரவை விலக்கிக் கொண்டால்—

சந்திரிகா அரசாங்கம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தமிழ் எம்.பிக்களின் தயவிலேயே முழுக்க முழுக்கத் தங்கியிருக்க வேண்டிவரும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு எதனையும் முன்வைக்காத நிலையில்—

ஈ. பி. டி. பி. போன்ற கட்சிகளின் ஆதரவைப் பெற அவற்றுக்கு சலுகைகள் சிலவற்றை வழங்கி, அவற்றைக் கைக்குள் போட சந்திரிகா முயற்சிக்கிறார்.

அவற்றில் ஒன்றே வடக்கு-கிழக்குக்கு இடைக்கால நிர்வாகச் சபை ஒன்றை நிறுவுவது என்ற யோசனை என்றும் தெரிவிக்கப்பட்டது. [அ-6-10]

கொழும்புக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

இதுவும் அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட சம்பவமாக இருக்கலாம் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

''எல்லாளன் படை'' என்ற பெயரில் விடுதலைப் புலிகளே கொழும்பில் தொடர் குண்டு வெடிப்புகளை நடத்தி வருவதாக கொழும்பில் பல பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டு வருவது தெரிந்ததே. (உ-10)

அதிபர்களுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கப்பட்டு அதனடிப்படையில் ஆசிரியர்களுக்கு கணிசமான சம்பள உயர்வு அண்மையில் வழங்கப்பட்டது தெரிந்ததே.

எனினும் அதிபர் சேவையில் உள்ளோருக்கு இந்த அதிகரிப்பு வழங்கப்படவில்லை.

இதனால் பாதிப்புற்ற அதிபர்களுக்கு உரிய சம்பள உயர்வு விரைவில் வழங்கப்படும் என தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

புதிய ஆசிரிய சேவைமுறை அறிமுகப் படுத்தப்பட்டதால் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கும் எனில் அதனை நீக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் பத்திரானா அறிவித்திருக்கிறார். (உ-8)

இன்று
பருத்தித்துறையில்
"தீ சுமந்தோர்"

17-06-1995 அன்று தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெற முடியாத யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தினரின்,

''தீ சுமந்தோர்'' நாடகம்

21 - 06 - 1995 புதன்கிழமை

நேரம்: மாலை 3-00 மணிக்கு
இடம்: பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் இடம்பெறும்.

— வணிக மாணவர் மன்றம்.
யாழ். பல்கலைக்கழகம்

[37162]

ஸ்ரீதர் அகலத்திரையில்

21 - 06 - 95 மாலை 6-30 மணிக் காட்சி
மட்டும்

கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில்
நிதர்சனம்
தயாரித்து வழங்கும்
மோகன், சகுந்தலா, கஜவதனி,
ரட்ணவடிவேல், திலகவதி
மற்றும் பலர் நடித்த
ஞானரதனின்

★ முகங்கள் ★

[சமூகச் சித்திரம் -- கலர்]

22-06-95

தினசரி 2-30, 4-30, 6-30
சனி, ஞாயிறு 10-30, 2-30, 4-30, 6-30

● முகங்கள் ●

(சமூகச் சித்திரம் — கலர்)

(சி-1524)

யுப்பிட்டர் கல்வி நிலையம்
சாவகச்சேரி

G. C. E. (O/L) - 95
மீட்டல் வினாவிடை வகுப்பு

விஞ்ஞானம் — திரு. T. பரமேஸ்வரன்
கணிதம் — திரு. N. அருட்சோதிவர்ணன்

பிரிவு I இல் அனுமதி மறுக்கப்பட்ட
மாணவர்களுக்கு புதிய பிரிவு

பிரிவு- II ஆரம்பம் 24-06-95
சனி மு. ப. 6.00 - 8.00

(சி/1533)

OEL

வடமாகாணத்தில் 19 வருடங்களுக்கு மேலாக
ஆற்றிய சேவையின் நம்பிக்கையின் சின்னம்
"ஒவிஸ் இகுயூப்மென்ட்"
(Office Equipment)
என்று எமது வாடிக்கையாளர்களால் மிக்க விருப்புடன்
அழைக்கப்பட்டு வந்த
'ஒவிஸ் இகுயூப்மென்ட் லிமிட்டெட்"
(Office Equipment Limited)
கிளை அலுவலகம்

தற்பொழுது புதிய விலாசத்தில் இயங்கி வருகின்றது என்பதை கவனத்திற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சேவைகள்:
★ தட்டச்சு, றோனியோ இயந்திரங்கள் மற்றும் சகல அலுவலக உபகரணங்கள்
பழுது பார்த்தல்
★ தரமும் அழகும் நிறைந்த உருக்கு தளபாட உற்பத்தியாளர்கள் - திருத்துநர்கள்
★ இரும்புப் பெட்டகம் (Iron Safe)
திருத்துநர்

இவை அனைத்தும் திறமையும் பல வருட அனுபவமும் நிறைந்த தொழில் நுட்பவியலாளர்களால் கையாளப்படும்.

● யாழ். நகரில் எமக்கு வேறு கிளைகள் இல்லை என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகிறோம்.

ஒவிஸ் இகுயூப்மென்ட் லிமிட்டெட்
கிளை அலுவலகம்
226, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.
பரமேஸ்வரா சந்தி - யாழ். பல்கலைக்கழகம்
அருகாமையில்

[சி-1702]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 21-06-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.